
# சொல்லோவியம்



## ஒவ்வொரு யூ ஆ சா பற்றறியும்

உங்கள் வாகனத்தை
உற்சாகமாக ஓட்டுவதற்கு
உத்தரவாதம் அளிக்கின்றது.

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:

# துரை அன் கோ.

23/3, ஸ்ரான்லி வீதி :: யாழ்ப்பாணம்
கிளை: கண்டி வீதி, பரந்தன்.



நகைகள், உங்கள் அழகுக்கு அழகு
சேர்க்கும் பிரத்தியேக அணிகலன்கள்!

அவைகளை அழகுடனும், பொலிவுடனும்
நினைத்தநேரத்தில் பெற்றுக்கொள்ளும்
ஒரே ஸ்தாபனம்

# முருகன் ஆபரண மஹால்

கந்தரோடை வீதி,
பஸ் நிலைய முன்பாக
சுன்னாகம்.

ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

# சொல்லோவியம்

## 1

★

மாண்புமிகு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**

அண்ணாமலை பல்கலைக் கழக

"டாக்டர்" பட்டமளிப்பு விழாவில்

ஆற்றிய உரை!

★

நியூஸ் சென்றர்
இல. 4, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

விலை சதம் 35

## டாக்டர் பட்டம் பொருத்தமானதே!

"தமிழ் உணர்ச்சிகளின் எழுச்சி உருவமாய் கருணாநிதி அவர்கள் இருக்கின்றார்கள் அதே நேரத்தில் பொறுப்புகள் வந்த போது மிகவும் நேர்த்தியோடு உணர்ச்சிகளுக்கு இடம் கொடாமல் நாட்டு நலன் பேணிவருகின்றார்கள். இத்தகைய அருமையான இலக்கிய ஆற்றலுக்கும் அருஞ்செயலுக்குமாகத் தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் தந்திருக்கிறது".

தமிழக ஆளுநர்
கே. கே. ஷா.

## நோக்கம்

இதயமாம் விளை நிலத்தில் அறுவடையான எண்ணம் என்ற நல்முத்துக்களை சொல்லோவியமாக அவ்வப்போது வடித்துத் தருகின்ற அறிஞர் பெருமக்கள் அந்த அறிவுக் கருவூலங்கள் செய்தித் தாள்களுடனும் வானொலிப் பேச்சுக்களுடனும் ஆயுளை முடித்துக்கொள்ளாமல் வாசகர் கரங்களில் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பது எமது நோக்கம்.

இந்த நோக்கத்தின் விளைவே சொல்லோவியம் சொல்லேருழவராம் மாண்புமிகு கலைஞர் தமிழக அரசின் முதலமைச்சர் கலாநிதி மு. கருணாநிதியின் நாவண்ணம் முதலாவது ஓவியமாக உங்கள் கரங்களில் காட்சியளிக்கிறது.

அறியாமை இருளை அகற்றும் பகலவனின் ஒளிக்கதிர்களான இந்தப் படைப்புகள் இன்னும் தொடரும். வாசகர்களான உங்களின் பேராதரவில் நம்பிக்கை வைத்து இந்த உறுதியைக் கூறிக்கொள்ளுகிறோம். வணக்கம்.

பதிப்பகத்தார்.

பல்கலைக்கழக வேந்தரவர்களே!
இணை வேந்தரவர்களே!
துணை வேந்தரவர்களே!
பேராசிரியப் பெருமக்களே!
மாணவர்களே!

## அறிவுக்கூடம்

" இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப்புப் புன் செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாய்ச் சிரம
வழக்கெல்லாம் குழிகொட்டி மண்மூடிப் போட்டு
தெருட்சாருஞ் சுத்த சன்மார்க்க நன்னீதி "

வழங்கிய அருட்சோதி வள்ளலார் காட்டும் தூயநெறி நின்று பணியாற்ற வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் எனும் மகிழ்ச்சியுடன் அடிகளார் வாழ்ந்து சிறந்த தில்லை மூதூரில் ;

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பாய்
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணாய்
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமாய்
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியாய்
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவாய்

எழுந்துநிற்கும் அறிவுக்கூடமாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டம்பெறக் குழுமியுள்ள என் அன்பு உடன் பிறப்புகளே! உங்களையெல்லாம்

தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் மிகக் கலந்தே
தனித்த நறுந்தேன் பெய்து பசும்பாலும் தெங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொரு தீம்பருப்பிடியும் விரவி
இனித்த நறுநெய் அளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்த சுவைக் கட்டியினும் இனித்திடும் தெள்ளமுதாம்
என் தமிழ்மொழியால் வாழ்த்துகின்றேன்.

## அண்ணாமலை அரசர்

அறிவுத்துறைக்கு ஆக்கம் சேர்த்த ஆல்பிரட் நோபல், ராக்பெல்லர் போன்று கல்வித்துறைக்குக் கரம் சிவக்க வாரி வழங்கியவர் அண்ணாமலை அரசர். அந்த ஏந்தலின் புகழ்பாடும் எழில் மாளிகையாகத் திகழ்வதே இந்தப் பல்கலைக் கழகம்.

அந்தப் பெரியவரின் கீர்த்திக் கொடி வான் முட்டப் பறந்திட அரும்பணியாற்றிடும் ஆசிரியப் பெருமக்களும் மாணவ நண்பர்களும் தமிழுலகின் பாராட்டுக்குரியவர்களாவர் என்பதில் வியப்பேதுமில்லை.

## பட்டம்

விரிந்து மலர்ந்து தழைக்கும் அறிவுலகில் ஆற்றலாளர்களாய்ப் பீடுநடை போடப் பட்டம் பெறுகின்றீர் இன்று, உமக்கிடையே வாழ்த்துரை தந்திட வந்துள எனக்குமோர் பட்டமளிப்பினை நடாத்துகின்ற நிகழ்ச்சிக்கு எவ்வாறு நான் நன்றி கூறுவேன்! சங்க காலத் தமிழகத்தில் விழுப்புண் படாது இயற்கையாக ஒருவன் இறந்திடுவானாயின் அவன் சடலத்தைப் புதைப்பதற்கு முன்னர் கத்தியால் ஓர் காயத்தைச் செய்து அவனை விழுப்புண் பெற்றவனாய் ஆக்குதல் மரபாம்.

அவ்வாறே இன்று எனக்கும் ஓர் பட்டத்தை அளித்து என்னையும் பட்டம் பெற்றவனாக ஆக்குகின்றீர் என எண்ணுகின்றேன். என் உழைப்பில் நான் மேலும் உற்சாகம் பெற்றிட என் கொள்கைகளில் நான் மேலும் உறுதி கொண்டிட — இந்தச் சிறப்பு எனக்குத் தரப்பட்டுள்ளதாகக் கருதி, இந்த விருது தமிழ் உணர்வுக்கும், கலையார்வத்துக்கும், பண்பட்ட பகுத்தறிவுக் கொள்கைக்கும் அளிக்கப்பட்ட விருது எனக் கொண்டு இந்தப் பெருமையை என்னரும் தமிழர்க்கும் எனை வளர்த்த தலைவர்க்கும் காணிக்கையாக்குகின்றேன்.

## அண்ணா சொன்னது

இந்தப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவிலே பேருரையாற்றிய அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்ட ஒன்றை நானும் இப்போது நினைவு கூர்கிறேன்.

'என்னுடைய வரம்புகள் எனக்குத் தெரிவது எனக்கு ஆறுதலாக இருக்கிறது. ஏனெனில் நான் புதிதாகச் சுயமாக என்றால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கருத்துக்களையோ தத்துவங்களையோ உங்களுக்கு இப்போது வழங்கப்போவதில்லை. அறிஞர் பல்லோரின் அறிவுரைகளையே உங்களுக்கு நினைவு படுத்தப் போகின்றேன். கல்வித் துறையில் சம்பந்தப்பட்ட வல்லுநர்களின் கருத்துக்களை சாமான்ய மனிதன் பார்வையிலே நோக்க விரும்புகிறேன் இது சாமான்யர்களின் யுகம். இது சிலருக்கு வருத்தம் தருவதாக இருக்கலாம், ஆனால் இது மறுக்க முடியாத உண்மை. நான் அந்தச் சாமான்யர்களின் பிரதிநிதி.''

இப்படி அண்ணா அவர்கள் தன்னைப்பற்றிக் கூறிக்கொண்டது முற்றிலும் எனக்கும் பொருந்துமென்றே மகிழ்கிறேன். நீங்கள் வழங்கிடும் "டாக்டர்'' விருது, மேலும் என்னை அடக்கமுடையவனாக ஆக்கிடும் என்று உறுதி கூறுகிறேன்.

## ஒளி விளக்கு

நம் நாடு, கல்வித் துறையில் வியத்தகு முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது. சமூகத்தில் செல்வமும், செல்வாக்கும் பெற்றிருந்த ஒரு சிலரின் — வசதியும் வளமையும் படைத்திருந்த உயர் குடிமக்கள் ஒரு சிலரின் — தனி உரிமையாகக் கல்வி இருந்தகாலம் மாறி, இன்று சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாமான்யர்களும், தலைமுறை தலைமுறையாக அறிவாலயத்தில் நுழைய அருகதையற்றவர்களாயிருந்தவர்களும், கல்வி பயிலும் உரிமையும், வசதியும் பெற்று ஒளி விளக்குகளாய் மின்னிடும் காட்சி காணுகிறோம்.

தகுதி, திறமை என்பவை எந்த ஒரு பிரிவினருக்கும் ஏகபோகமானவையல்ல; உரிய வாய்ப்பும் வசதியும் ஊக்கமும் அளித்தால் உயர்வடையும் தகுதியுள்ள மாணவர்கள் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றனர் எனும் உண்மை உணர்ந்து அவ்வழி செயல்படும் காலம் இது.

## புதிய தலைமுறை

இன்று பழைய கொள்கைகளும் கோட்பாடுகளும் தங்கள் செல்வாக்கை இழந்துவிட்டன. ஆனால் அவற்றின் இடத்தில் புதிய குறிக்கோள்களும் இலட்சியங்களும் இன்னும் நிலை நிறுத்தப்படவில்லை. இன்று சமூகத்தில் நமக்கு ஏற்பட்டுள்ள பல சோதனைகளையும் சாதனைகளாக மாற்றும் அறைகூவலை ஏற்று, காலத்தோடு ஒட்டிய நெறி முறைகளை — வாழ்க்கைப் பண்புகளை — வகுத்துக் கொள்ள வேண்டிய நிலையில் உள் ளோம்.

புதுமை வேகத்துடனும், புரட்சிக்கருத்துடனும், பொங்கி வரும் இலட்சியத் துடிப்புடனும், பொது நல நோக்குடனும் இளைஞர் சமுதாயம் நாட்டின் நல்வாழ்வில் பங்கு கொள்ள வகை செய்வதில் முன்னணியில் நிற்க வேண்டியவர்கள் மாணவர்களேயாவர்.

பல்கலைக்கழகம், தேசிய வாழ்க்கையின் கண்ணாடியாக இருக்க வேண்டும். சமுதாய வளர்ச்சியைப் பிரதிபலித்திட வேண்டும். மாறும் உலகிற்கேற்பப் புதிய தலைமுறையினரைத் தயாரிக்க வேண்டும்.

## இயற்கை அறிவு

வாலிபம் ஒரு வசந்தம், மிக வசீகரமானதுங்கூட! ஆனால் அதில் உள்ள ஒரு குறை என்ன வென்றால்; ஒவ்வொரு நாளும் — ஒவ்வொரு மணித் துளியும் — ஒவ்வொரு விநாடியும் வாலிபத்தை, வயோதிகம் வாகை சூடிக்கொண்டேயிருக்கிறது இளமை சிரஞ்சீவியாக இருக்க வேண்டுமெனில், அது உடலை விடுத்து உள்ளத்தை அடைக்கலம் புகுந்திட வேண்டும். வய தில் அறிவில் முதியோராய் வாய்மைப் போருக்கு என்றும் இளையோராய்" தங்கள் சிந்தனையோட்டத்தின் திசை திருப்பிட வேண்டும்.

ஏட்டுக் கல்வி, வளரும் தருவுக்கு வாகன உரம் என் பேன். அதற்காக உரம் மட்டுமே மரம் என இயம்பிடல் தவறன்றோ! கொடி பற்றும் கிளையும், கொழுந்தும் பழுப்புமாக இலையும் காய்கனிக் குலையும் கொண்டு, களைத்தோர்க்கு நிழலும் அளிப்பதன்றோ நன்மரமாகும்! கல்வியின் பயனும் அங்ஙனம் இருந்திடல் வேண்டும்' பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பயின்றாலும், பிறர்க்கு நன்மைப்பயன் படுத்தும் கல்வி பெறவிட்டால் நாட்டுக்கு ஏது நன்மை? ஏட்டறிவு மட்டும் போதாது இயற்கை அறிவும் வளப்படுத்தப்பட வேண்டும்.

## கருத்துப் பேழை

சிறந்த கல்வி மேதை ஏ எல். முதலியார் அவர்கள் சுட்டிக்காட்டிய கருத்துப் பேழை ஒன்றினை உம் எதிரே திறந்திடல் பொருத்தமென எண்ணுகிறேன்."

பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் கிடைக்கும் வெற்றியும், தோல்வியும் தகுதியை அளிப்பதில்லை. அதன் மூலமாக எதிர்காலத்தை கணக்கிடலாம். எண்ணத்திலும், சாதனையிலும் காட்டப்படும் தனித் தன்மைகள் தேர்வுகளின் மூலமாக அளவிடப்படுவது கிடையாது. எழுத்து மூல தேர்வின் வழியாகவே குறிப்பிட்ட பாடத்தின் திறமைகள் கணக்கிடப்படுகின்றன.

மற்றவர்கள் எழுதிய பாடங்களை திரும்ப ஒப்பிப்பதும் கணக்கு குறியீடுகளை வேகமாக போடுவதும் திறமையாக இருக்கலாம். ஆனால் தனித் தன்மையுடனும், பிரச்சனைகளுக்கான புதிய முறைகளை காணும் தகுதியுடனும் அதை ஒப்பிட முடியாது.

## இசைத்தட்டு

மாணவனிடம் பல பரீட்சைகளில் வெற்றி பெறுவதற்கான சான்றிதழ்கள் இருக்கலாம். ஆனால் அவைகள் எல்லாம் இசைத்தட்டுக்கள் போலதான்.

தனியாக ஒரு விஷயத்தை ஆராய்வதிலும், அறிந்து கொள்வதிலும் அக்கறை காட்டாவிட்டால் விஞ்ஞான உணர்வுகளை அறிந்து கொள்ள முடியாது. புதிய ஆய்வின் மூலமாக அறிவை பெருக்கலாம்."

## வேலை வாய்ப்பு

கூழாங் கற்களை வைரமாக்கும் கல்வி முறை வேண்டும் வைரத்தில் எண்ணை இறங்கிட வைத்திடும் கல்வி முறை கூடாது. "வைரமாக்குகின்றீர் எம்மை! ஏழையின் வீட்டில் வைரத்திற்கு மதிப்பு ஏது? சீமாட்டியின் மூக்குத்தி போலி வைரமாயினும் கோகினூர் என்பர்! குப்பை மேட்டில் வைரத்திற்கு கவுரவம் உண்டோ?" எனக் கேட்டுப் பட்டை தீட்டப் பட்ட வைரமெனப் பட்டம் பெற்ற நீவிர்; "வேலை எங்கே பணம் தேடிட" எனக் குமுறுவது யாருக்கும் தெரியாமல் இல்லை.

படிப்பின் இலட்சிய நோக்கு வேலை ஒன்றுதான் எனக் கூறிட இயலாதாயினும், வேலை வாய்ப்பு அளித்திடும் திட்டத்தையும் விரைவுப்படுத்தி விரிவு படுத்தினால் தான் நாடு வறுமைக் காடாகும் நிலையிலிருந்து விடுபடும் என்பதை உணர்ந்தே செயல்பட வேண்டும்.

பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தேடித் தருவதற்கு பல்கலைக் கழகத்தில் வேலை தேடித் தரும் தனிப் பிரிவு ஒன்றினை ஏற்படுத்துவது அவசியம் என்று இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நம் நாட்டில் பல பல்கலைக்கழகங்களில் இத்தகைய பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய பிரிவினால் உருப்படியான நன்மை ஏற்பட வேண்டுமென்றால், பொதுத்துறையிலும் தனியார் துறையிலும் இயங்கி வரும் தொழில் நிறுவனங்களிலுள்ள வேலைகளுக்குத் தகுதியுடையவரைத் தேர்ந்தெடுக்கும் போது இப்பிரிவின் தொண்டினைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

## மேல் நாடுகளில்

மேல்நாடுகளில் தனியார் தொழில்களில் ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, அத்தொழில் நிறுவனங்கள் கல்லூரிகளுடன் தொடர்பு கொண்டு. சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் கலலூரியிலிருந்து தேர்வு பெறுவதற்கு முன்பாகவே அவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் அளிக்க முன் வருகின்றன அத்தகைய நிலை நம் நாட்டில் உருவாகுவதற்கு இன்னும் பல ஆண்டுகள் செல்லக் கூடுமென்ற போதிலும், இதில் உடனடியாக ஒரு தொடக்கம் காண்பது அவசியமாகிறது.

பல்கலைக்கழகங்கள் வேலை தேடித் தரும் பிரிவை அமைக்கும் போது, தனியார் தொழில் நிறுவனங்களின் அதிபர்களைக் கொண்டு ஆலோசனைக் குழு ஒன்றினை அமைத்தல் நலம். தென்பகுதியிலுள்ள எல்லா பல்கலைக்கழகங்களும் ஒன்று சேர்ந்து பொதுவான குழுவினை அமைப்பது நல்ல பலனைத் தரும். தனியார் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான தேர்ச்சியுடைய மாணவர்களைத் தயார் செய்யும் வகையினில் பல்கலைக்கழகங்கள் தம்முடைய பாடத் திட்டங்களையும், பயிற்சி முறைகளையும் திருத்தி அமைத்துக் கொள்வது அவசியம்.

## சொந்த தொழில்

ஐந்தாண்டுத் திட்டப் பணிகளையொட்டி, வேலை வாய்ப்புகள் பெருகி வருகின்றன. இருந்த போதிலும் படித்தவர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் நிலையினை நாம் உடனடியாக எய்திட முடியாது.

இன்னும் ஒருசில ஆண்டுகளாகிலும் படித்தவர்கள் அனைவரும் அரசாங்க அமைப்புகளிலோ தனியார் தொழில் நிறுவனங்களிலோ, வேலை கிடைக்கும் வாய்ப்பை மட்டும் எதிர்பார்த்துக் கொண்டிராமல், தாங்களே சொந்தமாகத் தொழில் முயற்சிகளைத் தொடங்கிடல் வேண்டும். அவ்வாறு தொழில்

மேற்கொள்ள வரும் படித்தவர்களுக்குப் பண உதவி அளிப்பதற்கு இப்போது தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகள் முன் வந்துள்ளன.

## வேளாண்மை

வேளாண்மைத் துறையில் பட்டம் பெற்றவர்கள் கூடச் சொந்தத்தில் வேளாண்மைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தயங்குதல் ஏனோ? இவர்கள் பயிற்சியும் படிப்பும் நாட்டுக்குப் பயனுள்ளவையாக அமைந்திட வேண்டும் என்றால், அவர்கள் வேளாண்மையில் ஈடுபட முன்வர வேண்டும்.

அது போலவே, பொறியியல் பயிற்சியில் பட்டம் பெற்றவர்களும் கிராமங்களுக்குச் சென்று சிறு சிறு தொழிற்கூடங்களும் பட்டறைகளும் அமைத்துங் கொள்வது அவர்களுக்கும் நல்லது, சமுதாயத்திற்கும் பெரு உதவியாயிருக்கும்.

## பழுது பார்க்கும் வேலை

நம் வளர்ச்சித் திட்டங்களையொட்டி, கிராமங்களில் பல்லாயிரக்கணக்கான நீர் இறைவை இயந்திரங்களும், பூச்சி மருந்து தெளிப்பான்களும், இதர முற்போக்கு வேளாண்மைக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் பல, இன்று பழுதாகியுள்ளதை நாம் காண்கிறோம். இந்த இயந்திர சாதனங்களுக்குத் தேவைப்படும் பழுது பார்க்கும் வேலையைச் செய்வதற்கு உள்ளூரிலேயே திறமையுள்ளவர்கள் கிடைக்காத காரணத்தினால், இக்கருவிகள் பல, இயங்காமல் முடங்கிக் கிடக்கின்றன.

இந்தக் குறையினைப் போக்கிட வேண்டுமென்றால், பொறியியல் பயிற்சி பெற்ற மாணவர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று, கிராமத்திலேயே தொழிற்கூடங்கள் அமைத்து, அங்குள்ள வேளாண்மைக் கருவிகளைப் பழுது பார்த்துச் செம்மையாக அவை இயங்குவதற்கு உதவி செய்திட முன்வர வேண்டும்.

## பாடத் திட்டம்

இப்போது அறிவியல் படிப்பில் மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இது வரவேற்கத்தக்கது, ஆயினும் அறிவியல் படித்த மாணவர்கள், வரலாறு, கலையியல் ஆகியவற்றைப்பற்றி அக்கறை கொள்ளாத ஒரு நிலையையும், கலையியல் மாணவர்கள் அறிவியல் ஆர்வமோ ஆற்றலோ ஒரு சிறிதும் இல்லாத ஒரு நிலையையும், நாம் காண்கின்றோம். மாணவர்கள் முழுமையான ஆற்றல் பெற்றிட இந் நிலை உகந்தது அல்ல.

பள்ளிப் படிப்புவரை, அறிவியல், கலையியல் எல்லாப் பாடங்களையும், பொதுவாகக் கற்றுவரும் மாணவர்கள், கல்லூரியில் புதுமுக வகுப்பு நிலைக்கு வந்தவுடன், கலையியல் பாடப் பயிற்சியையோ தேர்ந்தெடுத்து, இரு தனிப் பிரிவுகளாகிச் சென்று விடுகின்றனர். கல்லூரி மண்டபத்தில் கலையியல் பாடத்தை அவர்கள் படிக்கும் போது அறிவியல் அனுபவம் பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு எதுவுமே இல்லாமல் போய்விடுகிறது. அது போலவே அறிவியல் பயிற்சியைத் தேர்ந்தெடுப்பவர்கள், கலையியல் வரலாறு, பொருளியல் ஆகிய பாடங்களோடு சிறிதும் தொடர்பில்லாத நிலை ஏற்பட்டு விடுகிறது.

இந்த நிலையினைப் போக்கிட அறிவியல் பாடங்களில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றவர்களும், கலையியல், வரலாறு பொருளியல், போன்ற பாடங்களில் ஒன்றினைக் கட்டாயமாகக் கல்லூரிப் பயிற்சிக் காலம் முழுவதும் படிக்க வேண்டுமென்று விதிப்பதும் வரலாறு., கலையில் போன்ற பாடங்களைத் தேர்ந்தெடுத்தவர்கள், இயல்பியல், வேதியில், உயிரியல் போன்ற அறிவியல் பாடங்களில் ஒன்றினைக் கற்றிட வேண்டுமென்று விதிப்பதும் அவசியம் என்று நான் கருதுகிறேன்.

## மாறுதல் தேவை

இது பல்கலைக்கழகப் பாடத்திட்டத்திலேயே முற்றிலும் புதிய ஒரு மாறுதல் என்று சிலர் தயங்கலாம். ஆனால் நம்முடைய மாணவர்கள் ஒரு சீரான அறிவைப் பெற்று எல்லாத் துறைகளிலும் ஓரளவு ஈடுபாடு கொண்டு. அதனை அடிப்படையாக வைத்து சில சிறப்புப் பாடங்களில் நுட்பத் தேர்ச்சி பெற வேண்டுமென்றால், இந்தச் சீர்திருத்தம் இன்றியமையாதது என்பது என்னுடைய திடமான எண்ணம். அறிவியல், கலையியல் இரண்டு துறைகளிலுமே இணைந்த அறிவு, மாணவர்களுக்கு இன்றியமையாததாகிறது. இந்த இரண்டு அறிவுகளையும் இணைத்து நாம் வழங்கத் தவறுவதால்த் தான், மாணவர்களிடையே தேர்ச்சிக் குறைவும், வேலை வாய்ப்புகள் பெறுவதில் சிரமங்களும் ஏற்படுகின்றன.

கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட வல்லுநர், நான் கூறியுள்ள இக் கருத்தைப் புதிய கருத்து என்ற காரணத்திற்காகவே, புறக்கணித்து விடாமல், அறிவியல், கலையியல் ஆகிய இரண்டு துறைகளிலும் மாணவர்களுக்கு 'முழுமையாகப் பயிற்சி அளிப்பதற்கு இப்போதுள்ள பாடத் திட்டங்களில் மாறுதல்கள் செய்திட முன்வர வேண்டும் என்று பணிவுடன் வேண்டுகிறேன்.

## சமுதாயப்பணி

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலே படித்த இளைஞர்கள் சமுதாயப் பணியில் ஈடுபடுவதாக, அமைதிப்படை இயக்கம், தொண்டர்படை இயக்கம், போன்ற இயக்கங்கள் இயங்கி வருகின்றன. இது போலவே நம் நாட்டு இளைஞர்கள் சமுதாய உணர்வுப் பணியினில் ஈடுபடத் திட்டங்களைத் தீட்டுவது அவசியமாகிறது. பட்டம் பெற்ற அனைவரும் ஓராண்டாகிலும் சமூகத் தொண்டினில் ஈடுபடுவதைக் கட்டாயமாக்க வேண்டு மென்று சிலர் ஆலோசனை கூறியுள்ளார்கள். தொண்டினைக் கட்டாயப்படுத்திச் செயல்படுத்திட முடியாது.

அதே சமயத்தில், மாணவர்கள் கிராமங்களுக்குச் சென்று சேவை செய்ய வேண்டுமென்று மேடையில் முழங்குவதாலும், அறிவுரைகள் கூறி, அறைகூவல் விடுவதாலும் மட்டுமே, நாம் எதையும் சாதித்துவிட முடியாது. உண்மையிலேயே உருப்படியான பலன் ஏற்பட வேண்டுமென்றால் மாணவர்களைத் தொண்டில் ஈர்த்துத் தாமாகவே விரும்பி முன்வந்து இந்த சேவைத் திட்டங்களில் பங்கு கொள்வதற்குச் சாதகமான சூழ்நிலையினை நாம் உருவாக்கித் தரவேண்டும். அதற்காக அவர்களுக்குப் பண உதவிகளும் சலுகைகளும் அளிக்க வேண்டும்.

## அரசின் திட்டம்

இதை மனத்திற் கொண்டுதான் தமிழ்நாட்டில் 2,000 படித்த இளைஞர்கள் கிராமப் புறங்களுக்குச் சென்று தொண்டு செய்வதற்கு ஊக்கம் அளிக்கும் திட்டம் ஒன்றினைத் தமிழக அரசு இந்த ஆண்டு கொண்டு வந்துள்ளது. இலட்சியத் துடிப்பும், ஆர்வமும், ஆற்றலும் கொண்ட இளைஞர்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று விழைகிறேன்.

வேலை வாய்ப்புகள் — அதன் வாயிலாக வருவாய் — இவையெல்லாம் இளந் தலைமுறையை இயந்திரமாகச் செய்து விடல் கூடாது. தானுண்டு தன் பெண்டு பிள்ளையுண்டு என ஒவ்வொரு இளைஞனும் மாதந்தோறும் ஊதியக் கணக்கு வரவு செலவுகளை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தால் நாட்டின் பொதுவான முன்னேற்றம் தடை பட்டுப் போய்விடும். அந்த முன்னேற்றம் முகிழ்க்க முனைந்து நிற்க வேண்டியது இளைஞர் பேரணியேயாகும்.

## புதியதலை முறை

இளைஞர்கள் தான் முற்போக்கு எண்ணங்களின் முன்னோடிகள், இளைஞர்களின் அமைதியின்மை இந்தியப் பிரச்சனை அல்ல; அனைத்துலகப் பிரச்சினை! ஒவ்வொரு பழைய தலைமுறையும், புதிய தலைமுறையைப் பழித்தே பழக்கப்பட்டிருக்

கிறது. பிளேட்டோ காலத்திலிருந்து இப்படித்தான்; இன்று நேற்றல்ல!

"இந்தத் தலைமுறை முன்பு போல் இல்லை. தரம் குறைந்து விட்டது"

இது நமது பாட்டனார் காலத்திலிருந்து பரம்பரை பரம்பரையாகச் சொல்லப்படும் குறை! குடுமித் தலையில் மாற்றம் ஏற்பட்ட போதும் குமுறல் — இப்போது உடலைப் பிடிக்கும் உடைகளைக் காணும்போதும் குமுறல் — நடைகளில் ஏற்படும் மாற்றங்களல்ல; மனத்தில் ஏற்படும் மாற்றங்கள்தான். சமுதாயத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும், புதிய கோணங்களை ஏற்படுத்த வல்லவை!

ஒரு தலைமுறைக்கும் இன்னொரு தலைமுறைக்கும் வேறுபாடு இருப்பது தவறில்லை. ஆனால், இடையில் ஆக்க பூர்வமான வளர்ச்சி தழைத்திடல் தேவை பிளேட்டோ காலத்தில் சிலநூறு மாணவர்கள் இருந்தார்கள். ஆனால் இன்று அமெரிக்க நாட்டின் மக்கட் தொகையில் பாதிப்பேர் மாணவர்கள்.

## தீவிரவாதம்

இந்தியாவில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இருக்கும் மாணவர்களின் தொகை, பிரான்சுநாட்டு மக்கள் தொகைக்குச் சமம் மாணவர்களில் ஒரு சிலரது உள்ளத்தில் தீவிரவாதம் பொங்கியெழுந்து வழிந்தோடுகிறது. நான் தீவிரவாதத்தின் பகைவனல்ல.

முகத்திலே இருக்கும் பருக்கள் அழகைக் கெடுக்கின்றன உண்மைதான். அதற்கு அடிப்படைக் காரணமுணர்ந்து மருந்திடல்தான் முறையே தவிரச் சந்திர பிம்பமெனும் வதனத்தை விகாரமாக்கும் பருக்களைக் கிள்ளி எறிகிறேன் என நகங்கொண்டு பெயர்த்தெறிந்தால் ரத்தம் கொப்பளிக்கும், தழும்புகள் தோன்

றும். சிலவேளைகளில் புண்பட்டுப் புரையோடி உயிருக்கே உலை வைக்கும்.

குறு மருக்களை அகற்றும் கொள்கையில் வேறுபாடில்லை. முறையில் தானே முரண்பாடு! இலட்சியத்தைப் போலவே இலட்சியத்தை அடையும் வழிமுறைகளும் நன்முறைகளாக இருத்தல் வேண்டும்.

### ராஜேந்திரன்

பல்கலைக்கழகத்திற்கு வரும் பால்வடியும் முகத்தினன் மாணவன் ராஜேந்திரன் சிலையாக நின்றுகொண்டிருக்கிறான். தன்னை வளர்த்த மொழியைக் காக்க, அவன் தன்னுயிரைத் தாரைவார்த்தான். இலட்சியம் ஈடேறப் பிறரை வருத்தல் பிறரை அழித்தல் — முறையல்ல! கூடாது! கூடவே கூடாது.

" கொலைவாளினை எடடா; மிகு கொடியோர் செயல் அறவே! "

என்றார் பாரதிதாசன், கவிதையை உற்றுக் கவனியுங்கள்! கொடியோர் செயல் அறவே; கொலைவாளினை எடடா என்றாரே தவிர; கொடியோர் தலை அறவே கொலைவாளினை எடடா எனக் கூறினார். இல்லை! சிலர் செயல் அறத்தான் அந்தச் சிங்க நாதம் செய்தார்.

அந்தச் சிங்கக் கூட்டத்தைத் தான் என் எதிரே காணு கின்றேன். இறும்பூதெய்துகின்றேன்.

கருமுகில் கண்டு திருமயில் ஆடுமென்பர்.
சுதிரொழி கண்டு தாமரை மலருமென்பார்.
என் நிலையும் அதுதான்!

உமது விழியொழி கண்டு மகிழ்கின்றேன் — விடைபெற முடியாது பிரிகின்றேன்.

**வணக்கம்**

உங்கள் மேனி எழிலுக்கு மேலும் எழிலூட்டும்

சிறந்த 'தயா பிறசியர்கள்'

வாங்குங்கள்!

வனப்புமிக்கவை, நீடித்து உழைப்பவை

தயா பிறசியர்கள்! தயா சேட்வகைகளே!!

தயா இன்டஸ்றீஸ்

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,

சுன்னுகம்.

சுவைமிகு

● சந்திரா ஐஸ்கிறீம்

○ ஐஸ்பழம்

● ஐஸ்பார்

○ ஐஸ்சொலி

வகைகளை தினமும் சுவைத்து மகிழுங்கள்!

தயாரிப்பாளர்:

சந்திரா ஐஸ்கிறீம்

108, சிவன் வடக்கு வீதி,

யாழ்ப்பாணம்.


ஜோதி அச்சகம், யாழ்ப்பாணம்.

நங்கையர் விரும்பும் நவநாகரீக

நகைகளுக்கும்

வைரங்களுக்கும்

புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

கே. என். எம்.

மீரான் சாஹிப்

தங்கப்பவுண் நகைமாளிகை

தொலைபேசி: 585

கன்றுதிட்டி :: யாழ்ப்பாணம்

சுவைமிகு

றியோ ஐஸ் கிறீம், ஐஸ் பழம்,

ஐஸ் பார், ஐஸ் ஜோலி

இவற்றைச் சுவைத்து மகிழ்வதோடு

இதமான சிற்றுண்டி,

பலகார வகைகளையும்

உண்டு களிக்க

விஜயம் செய்யுங்கள்.

ஹோட்டல் றியோ

55, பிரதான வீதி :: யாழ்ப்பாணம்

**உல்லாசப் பயணிகளுக்கு ஓர் நற்செய்தி......**

குடும்பத்தினருடன் தங்கிச்செல்லவும்,
விருந்து வைபவங்கள் நடாத்தி மகிழவும்

**நீங்கள் தேர்ந்தெடுக்கக்கூடிய சிறந்த ஹோட்டல்**

நவீன **வசதிகளுடன்** நிர்மாணிக்கப்பட்ட

# டீலக்ஸ் ரூறிஸ்ட் ஹோட்டல்

**சுவையான சிற்றுண்டி**

**பலகார வகைகள்**

**இதமான மதிய போசனம்**

**குளிர்பான வகைகள் அருந்தி மகிழவும்**

**குறித்த நேரத்தில் ஓடருக்கு உணவுவகைகள்**
**தயாரித்துக்கொள்ளவும்**

**விஜயம்செய்யுங்கள்.**

# டீலக்ஸ்

# ரூறிஸ்ட் ஹோட்டல்

**உரிமையாளர்: கே. சவரிமுத்து**

கீரிமலை வீதி,

**காங்கேசன் துறை.**

*ஜோதி அச்சகம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்*